விழுப்புரம் மாவட்டத்தில் சாலை விபத்து!

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 18–

**விழுப்புரம் மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் நிதி வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது :-

விழுப்புரம் மாவட்டம், சென்னை புதுச்சேரி கிழக்கு கடற்கரை சாலையில், கீழ்புத்துப்பட்டியில் உள்ள சந்திப்பு சாலையில் 16.07.2023 அன்று அதிகாலை 05.00 மணியளவில் சென்னையில் இருந்து புதுச்சேரி நோக்கி வந்த கார் ஒன்று மீன் வாங்க காத்துக் கொண்டிருந்த புதுக்குப்பம் மீனவ பெண்கள் மீது மோதியதில் திருமதி. லட்சுமி (வயது 45) மற்றும் திருமதி. கோவிந்தம்மாள் (வயது 50) ஆகியோர் காயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்றும், திருமதி. கெங்கையம்மாள் (45) என்பவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி. நாயகம் (வயது 45), திருமதி. கேமலம் (வயது 46), திருமதி. பிரேமா (வயது 45) ஆகியோருக்கு சிறப்பான சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய அறிவுறுத்தி உள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களுடைய உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 இலட்சம் ரூபாயும், பலத்த காயமுற்ற திருமதி. நாயகம் அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாயும், இலேசான காயத்துடன் சிகிச்சையில் உள்ள மற்ற இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

எம்.பி.பி.எஸ். - பி.டி.எஸ்.

# மருத்துவப் படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியல்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார்!

சென்னை, ஜூலை 18-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (16.07.2023) சென்னை, கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் 2023-24 ஆம் ஆண்டிற்கான இளநிலை மருத்துவம் / பல் மருத்துவம் படிப்பில் சேருவதற்கான தகுதி பெற்ற மாணவ / மாணவியர்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

2023 - 2024 ம் ஆண்டின் இளநிலை மருத்துவம் (MBBS) மற்றும் பல் மருத்துவம் (BDS) ஆகிய படிப்புகளுக்கான அரசு மருத்துவ இடங்கள் / சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள அரசு மருத்துவ இடங்கள் / சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள நிர்வாக மருத்துவ இடங்கள் சேருவதற்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் 28.06.2023 முதல் வரவேற்கப்பட்டு 12.07.2023 விண்ணப்பங்கள் சமர்பிக்க இறுதி நாளாக அறிவிக்கப்பட்டது. மொத்தம் 40,200 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாகவும். இது கடந்த ஆண்டை காட்டிலும் 3994 அதிகம் என்றும், இதில் 7.5% அரசு பள்ளி மாணவர்களின் உள் ஒதுக்கீட்டிற்கு 3042 விண்ணப்பங்களும், விளையாட்டு பிரிவிற்கு 179 விண்ணப்பங்களும், முன்னாள் படைவீரர் பிரிவு ஒதுக்கீட்டிற்கு 401 விண்ணப்பங்களும் மற்றும் மாற்றுதிறனாளிகள் ஒதுக்கீட்டு பிரிவிற்கு 98 விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், பெறப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலனை செய்து இளநிலை மருத்துவம் (MBBS) மற்றும் பல் மருத்துவம் (BDS) படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியலும் மற்றும் 7.5% அரசு பள்ளி மாணவர்களின் உள் ஒதுக்கீட்டிற்கான பட்டியல் இன்று வெளியிடப்பட்டதாகவும், மேலும், 2023-24 ஆம் ஆண்டிற்கான அரசு மருத்துவ கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி மருத்துவ கல்லூரிகளில் உள்ள மொத்த இளநிலை மருத்துவம் 6326 இடங்களும், அரசு பல் மருத்துவ கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி பல் மருத்துவ கல்லூரிகளில் உள்ள மொத்த பல் மருத்துவம் 1768 இடங்களும், இந்தாண்டு 7.5% ஒதுக்கீட்டிற்கான அரசு மருத்துவ கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி மருத்துவ கல்லூரிகளில் உள்ள மொத்த இளநிலை மருத்துவம் 473 இடங்களும், 7.5% ஒதுக்கீட்டிற்கான அரசு மருத்துவ கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி மருத்துவ கல்லூரிகளில் உள்ள மொத்த பல் மருத்துவம் 133 இடங்களும், ஆக மருத்துவ இடங்களின் எண்ணிக்கை ஒட்டுமொத்தமாக 606 இடங்களும் உள்ளது. இந்த எண்ணிக்கையைப் பொறுத்தவரை 2020-2021 ஆம் ஆண்டு இளநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ இடங்களும் சேர்ந்து 7.5% இட ஒதுக்கீட்டின்படி 435, 2021-2022 ஆம் ஆண்டு இளநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ இடங்களும் சேர்ந்து 7.5% இட ஒதுக்கீட்டின்படி 555ம், இந்தாண்டு 2022-2023 ஆம் ஆண்டு இளநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ இடங்களும் சேர்ந்து 7.5% இட ஒதுக்கீட்டின்படி 584ம், ஆக இந்தாண்டு 606 இடங்களாக உயர்ந்து இருக்கிறது. நிர்வாக ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி மருத்துவ கல்லூரிகளில் (Management Quota) உள்ள மொத்த இளநிலை மருத்துவம் 1509 இடங்களும், நிர்வாக ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி பல் மருத்துவ கல்லூரிகளில் (Management Quota) உள்ள மொத்த பல் மருத்துவம் 395 இடங்களும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அரசு மருத்துவக் கல்லூரிகள் 36, இஎஸ்ஐ மருத்துவக் கல்லூரி ஒன்றும், சுயநிதிக் கல்லூரிகள் 21, சுயாட்சிக் கல்லூரிகள் (Deemed Universities) 13 சேர்ந்து ஆக 71 மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டிலேயே இருக்கிறது. ஆக 71 மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மாணவ சேர்க்கை இளநிலை மருத்துவ இடங்கள் 11,475 ஆக இருக்கிறது. பல் மருத்துவ இடங்கள் 2150 ஆக உள்ளது.

### இளநிலை மருத்துவம்/ பல் மருத்துவம் கலந்தாய்வு

இளநிலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் கலந்தாய்வை பொறுத்தவரை ஏற்கனவே ஒன்றிய அரசு வரும் 20ம் தேதி முதல் தொடங்கப்படும் என்று இன்னமும் அதிகாரப் பூர்வமான அறிவிப்பு இல்லாமல் இருக்கிறது. ஏற்கனவே 17ம் தேதி தொடங்கப்படும் என்று அதிகாரப் பூர்வமான அறிவிப்பு இல்லாமல் தெரிவித்தார்கள். ஒன்றிய அரசும் அந்தந்த மாநில அரசுகளும் ஒரே நேரத்தில் கலந்தாய்வு மேற்கொள்ளலாம் என்று சொன்னார்கள். இப்போது நமது துறையின் சார்பில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மற்றும் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்கக தேர்வுக் குழு தலைவர் ஆகியோர் இதில் இருக்கிற சிக்கல்களை சம்மந்தப்பட்ட ஒன்றிய அலுவலர்களுக்கு தெரிவித்து இருக்கிறார்கள். ஒரே நேரத்தில் இந்த கலந்தாய்வு நடைபெறுமேயானால் மாணவர்கள் ஒன்றிய அரசிலும், மாநில அரசிலும் பிளாக் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே இது காலவிரயம் ஆகும் எனவே ஒன்றிய அரசு நடத்தியதற்கு பிறகு 5, 6 நாட்கள் இடைவெளியில் மாநில அரசுகள் இந்த கலந்தாய்வை மேற்கொண்டால் சரியாக இருக்கும் என்கின்ற கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அவர்களும் இதற்கு ஒப்புதல் தந்து இருக்கிறார்கள். இந்த நிலையில் 20ஆம் தேதி என்று கலந்தாய்வை மேற்கொள்ள இருப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அது ஆதாரப் பூர்வமான செய்தி அல்ல என்றாலும், நாம் இன்றைக்கே தயாராக இருக்கிறோம். பட்டியல் வெளியிடப்பட்டதன் மூலம் நாளையே கலந்தாய்வு வைத்துக் கொள்ளலாம் என்று ஒன்றிய அரசு அறிவித்தாலும், தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை நாம் தயார் நிலையில் இருக்கிறோம். மேலும், ஒன்றிய அரசு வரும் 20ம் தேதி கலந்தாய்வு நடத்துமேயானால், தமிழ்நாட்டில் வரும் 25 ஆம் தேதி கலந்தாய்வு தொடங்கும் என்பதை உங்களின் வாயிலாக மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**15வது சுகாதாரத் துறை மாநாடு, டேராடூன்**

உத்திரகாண்ட் மாநிலம், டேராடூனில் இரண்டு நாட்கள் நடைபெற்ற, அனைத்து மாநில சுகாதாரத் துறை அமைச்சர்களுடனான, 15வது சுகாதார மாநாட்டில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் ஆகியோருடன் கலந்து கொண்டோம். இதில் பல்வேறு தலைப்புகளின் கீழ் அமர்வுகள் நடைபெற்றது. எல்லா அமர்வுகளிலும் தமிழ்நாட்டில் மருத்துவக் குறியீடு என்பது சிறப்பாக இருப்பதற்கு பாராட்டு பெற்றது. குறிப்பாக மருத்துவக் கல்லூரிகளாக இருந்தாலும், மாணவர்களின் சேர்க்கை போன்றவைகள் இருந்தாலும், காசநோய் வாகனங்கள் மூலம் வீடு தேடிச் சென்று அவற்றை பரிசோதனை செய்கிற பணியாக இருந்தாலும், தொற்றா நோய்கள், தொற்றா நோய்கள் Non Communicable Diseases என்று சொல்லப்படுகிற வகையில் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48, இதயம் காப்போம் போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்து மிகச் சிறப்பான பாராட்டுதல்கள் இரண்டு நாட்கள் நடைபெற்ற கூட்டத்தின் வாயிலாக கிடைக்கப்பெற்றது.

**நீட் தேர்வு – நெக்ஸ்ட் தேர்வு**

நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும், நெக்ஸ்ட் தேர்வு இருக்கவே கூடாது போன்றவை குறித்து ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் மனு அளிக்கப்பட்டது. ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் கூட நீட் தேர்வுக்கு எங்களால் என்ன செய்ய முடியும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறதே என்று சொன்னார்கள். நாங்கள் அப்போது சொன்னோம் தமிழக அரசின் சார்பில் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவரித்தோம். குறிப்பாக சட்டமன்றத்தில் சட்ட மசோதா நிறைவேற்றி, நிறைவேற்றப்பட்ட மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி, குடியரசுத் தலைவர் கடந்த காலங்களில் அதிமுக ஆட்சியில் இதே போன்று நீட் தேர்விற்கு எதிரான மசோதாவை அனுப்பி, குடியரசுத் தலைவர் உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி, உள்துறை அமைச்சகம் அதை நிராகரித்த விஷயத்தையும் கடந்த காலங்களில் சொல்லப்படாமலேயே போனது. ஆனால் அந்த நிலை இப்போது இல்லை.

குடியரசுத் தலைவர் அவர்களுக்கு இந்த மசோதா சென்றவுடன் குடியரசுத் தலைவர் அவர்கள் உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி, உள்துறை அமைச்சகம் மேல்நடவடிக்கையாக தொடர்ந்து பல்முறை மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும், உயர் கல்வி துறைக்கும், ஆயுஷ் நிர்வாகத்திற்கும் பல விளக்கங்கள் கேட்டு பல முறை கடிதங்களை எழுதினார்கள். தொடர்ச்சியாக நாங்களும் சட்ட வல்லுநர்களுடனான கலந்தாலோசனைக்கு பிறகு அதற்கான தெளிவான பதிலை சம்பந்தப்பட்ட உள்துறை அமைச்சகத்திற்கு தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கிறோம். இன்னமும் உயிரோட்டத்தில் இருக்கிறது என்கின்ற தகவலை ஒன்றிய அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னோம். மற்ற விவகாரங்களை சொன்னபோது அவர் உடனடியாக அவர் அருகில் இருந்த செயலாளர்களிடத்தில் மனுவைத் தந்து மிக விரைவில் இந்த மனுக்களுக்கு நாம் என்னவெல்லாம் தீர்வு காணவிருக்கிறோம் என்பதை, ஒரு கூட்டு கூட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரும், தமிழ்நாட்டில் இருந்து நமது துறையின் செயலாளர் மற்றும் பிரதிநிதிகளும் ஒருங்கிணைந்து அமர்ந்து கூட்டத்தின் வாயிலாக முடிவெடுத்துக் கொள்ளலாம். எனவே, அதற்கான தீர்வுகளை தயார் செய்யுங்கள் என்று சம்பந்தப்பட்ட செயலாளர்களிடத்தில் நாங்கள் அளித்த மனுவை அளித்தார்கள். மிக விரைவில் அந்த மனுக்களுக்கான தீர்வு என்கின்ற வகையில் நானும், துறையின் செயலாளர் அவர்களும் புது டெல்லிக்கு அழைக்கப்படுவோம் என்று நம்புகிறோம்.

அப்படி ஒரு கூட்டு கூட்டம் நடத்தப்பட்டு தமிழ்நாட்டின் தேவை குறித்தான ஒரு தனி நிகழ்வாக அது இருக்கும் என்று கருதுகிறோம். நீட் தேர்வை பற்றியும் நெக்ஸ்ட் தேர்வை பற்றியும் தமிழ்நாடு மட்டும் எதிர்ப்பு தெரிவிக்கிறது என்கின்ற ஒரு மாயத் தோற்றம் கடந்த இரண்டு நாட்களில் நடைபெற்ற கூட்டத்தில் தகர்த்தெறியப்பட்டு இருக்கிறது. பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக IMA தலைவர் பேசும் போது நெக்ஸ்ட் சரியில்லாத ஒன்று தேர்வு தேவையற்ற ஒன்று என்ற கருத்தை பதிவு செய்தார்கள்.

உத்ராகாண்ட் மாநிலத்தின் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கூட நீட் தேர்வு தேவையில்லாதது, நீட் தேர்வு வந்ததினால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நன்றாக படிக்கக்கூடிய மாணவர்களும் கூட அயல்நாடுகளுக்கு சென்று படிக்கக் கூடிய அவலம் இருக்கின்றது என்கின்ற வகையில் கருத்தை கூட்டத்தில் பதிவு செய்தார்கள். இப்படி பல விஷயங்கள் கூட்டத்தில் ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அந்தவகையில் நாங்களும் கூட மனுவில் தெளிவான விளக்கங்களுடன் மனுவை தந்து இருக்கிறோம். மிக விரைவில் தீர்வு கிடைக்கும் என்று நம்புகிறோம்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சாந்திமலர், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்கக தேர்வுக் குழு செயலாளர் மரு. முத்துச்செல்வன், கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு. பார்த்தசாரதி மற்றும் உயரலுவர்கள் உடனிருந்தனர்.



தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாக குன்டாண்டார் கோவில் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய செயலாளர் என்.சேட்டு தலைமையில் நடைபெற்ற தெருமுனை கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் மன்னை இளங்கோவன், மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வுகளில் மத்திய ஒன்றிய செயலாளர் சி.சண்முகம், மாவட்ட கவுன்சிலர் டி.செல்வம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர்.ஆர். ஸ்டாலின், ஒன்றிய அவை தலைவர் வீரசிங்கம் , ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் அன்பு, கொப்பம்பட்டி வீர, கனகரத்தினம் உள்ளிட்ட கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.



சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் 218வது நினைவு நாளையொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி பொல்லான் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விருதுநகர் – சாத்தூரில்

# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகள் ஆய்வு!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் மேற்கொண்டார்!

விருதுநகர், ஜூலை 18-

விருதுநகர் மற்றும் சாத்தூரில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகளை மேம்படுத்துவது குறித்து, மாவட்ட வருவாய் அலுவலர் ரவிகுமார் தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் மற்றும் சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆ.ரகுராமன் ஆகியோர் முன்னிலையில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (16.07.2023) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு துறையையும் மேம்படுத்தும் நோக்கில், சிறப்பு திட்டங்கள் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்தி வருகிறார்கள்.

அதன்படி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் கீழ் உள்ள தங்கும் விடுதிகளை மேம்படுத்துவது குறித்து தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இன்று விருதுநகர் மற்றும் சாத்தூரில் உள்ள தமிழ்நாடு ஹோட்டல் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் தமிழ்நாடு முன்னணி இடத்தில் உள்ளது. இங்கே புராதன கோயில்கள் உள்ளதால் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. சுற்றுலாத் துறையை மேம்படுத்த அரசு சுமார் ரூ.100 கோடி ஒதுக்கியுள்ளது. கைவிடப்பட்ட 13 தமிழ்நாடு உணவகங்களை மறுசீரமைக்க ஆய்வு மேற்கொண்டு சாத்தியக்கூறுகள் உள்ள சுற்றுலாத்தலங்களில் சுற்றுலா பயணிகளுக்கு புதிய படகு சவாரிகளை உருவாக்கவும் அரசு முயற்சி மேற்கொண்டும், சுற்றுலா தலங்களில் பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை வசதிகளை மேம்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா துறையின் கீழ் உள்ள கைவிடப்பட்ட 300 இடங்களை மேம்படுத்த புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, சாத்தூர் கோட்டாட்சியர் சிவக்குமார், விருதுநகர் நகர்மன்ற தலைவர் மாதவன் உட்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ப.கோவிந்தராசன் தலைமை! கே.பழனியப்பன் முன்னிலை! கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம்

# ராதாமங்கலத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

## என்.கௌதமன் - பவானிகண்ணன்- ஆரூர் மணிவண்ணன் சிறப்புரை!

நாகை, ஜூலை. 18 -

நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் ராதாமங்கலம் பாலத்தடியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளருமான ப.கோவிந்தராசன் தலைமை தாங்கினார்.

கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், கிளை செயலாளர் அ.ஜெய்சங்கர், ஒன்றியக் கழக அவைத் தலைவர் தங்க.மனோகரன், ஒன்றியக் குழு தலைவர் வாசுகி நாகராஜன், மாவட்டப் பிரதிநிதிகள் ஆர்.நடராஜன், ஷேக்முகமது, ஒன்றியக் குழு துணைத்தலைவர் எஸ்.புருஷோத்தமதாஸ், ஒன்றியக் குழு உறுப்பினர் எஸ்.ரெங்கா மாவட்ட ஊராட்சி உறுப்பினர் செல்விவீரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிளைச் செயலாளர் வி.மாதவன் வரவேற்றார்.

கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் பவானிகண்ணன், ஆரூர் மணிவண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் கீழ்வேளூர் பேரூர் செயலாளர் கா.அட்சயலிங்கம், ஒன்றியக் கழக துணைச் செயலாளர்கள் அ.வேதநாயகம், கே.ரவிச்சந்திரன், வெண்ணிலா பாபு, பொருளாளர் டி. பாரதி மோகன், மாவட்ட பிரதிநிதி சி.வீரமணி, ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் உ.கல்யாணசுந்தரம், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் அயலக அணி ஏ.ஜவகர் பாட்ஷா, விவசாயத் தொழிலாளர் அணி அ. வைத்தியநாதன், தொண்டர் அணி வி.சாய்பாட்ஷா, செந்தில்குமார், ஒன்றிய சார்பு அணி அமைப்பாளர்கள் ஜி.எல்.அம்பிகாபதி, ஜெ.முகமதுஅன்சாரி, எஸ். ராஜா, கிளைச் செயலாளர் பி.ஆர்.கிருஷ்ணமூர்த்தி, கிளைக் கழக நிர்வாகிகள் பி.சேதுராமன், வைத்தியநாதன், செல்வகுமார், கோவிந்தராஜ், கருணாநிதி, பக்கிரிசாமி, கலைமணி, முருகுபாண்டியன், தம்பிதேவேந்திரன், ராஜா, கோபாலன், தியாகு, சிற்றரசன், பாரதி, கார்த்தி, பிரபாகரன், லெனின் மற்றும் கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றியத்தில் இருந்து ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதி நிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர். முடிவில் கிளைச் செயலாளர் ஜெ. மாதவன் நன்றி கூறினார்.

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம்

# வன்னியன் விடுதியில் பகுதிநேர அங்காடி!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை. ஜூலை.18

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வன்னியன்விடுதியில் பொதுவிநியோக திட்டத்தின் கீழ் பகுதிநேர அங்காடியினை திறந்து வைத்து பயனாளிகளுக்கு உணவுப் பொருட்களை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 11.07.2023 அன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

பின்னர் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கந்தர்வக்கோட்டையில் அமுதம் பகுதி நேர அங்காடியினையும், நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் பகுதிநேர அங்காடியினையும், ரூ.5.3 லட்சம் மதிப்பில் புதிய மின்மாற்றியினையும் அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் திறந்து வைத்தார்.

மேலும் கந்தர்வக் கோட்டை, குமரன் காலனியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.10.19 லட்சம் மதிப்பில் புதிய அங்கன்வாடி கட்டடத்தையும், வெள்ளாளவிடுதி அரசு உயர்நிலைப்பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.7 லட்சம் மதிப்பில் சுற்றுச்சுவர் பணியினையும், வெள்ளாளவிடுதி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.5 லட்சம் மதிப்பில் கால்ஸ் நிறுவனம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள வெளிநோயாளிகள் ஒய்வு அறையினையும், ஆரம்ப சுகாதார நிலைய நுழைவுவாயில் பெயர் பலகையினையும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி இரத்ததான முகாம் மற்றும் மருத்துவமனை வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் பணியினையும், நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.38.69 லட்சம் மதிப்பில் வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடத்தையும் அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் திறந்து வைத்தார்.

பின்னர் மங்களாகோவிலில் நடைபெற்ற விழாவில் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.13 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பொதுவிநியோகக் கட்டடத்தையும் திறந்து வைத்து, வேளாண் பொறியியல் துறையின் சார்பில் 9 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.49 லட்சம் மதிப்பிலான கடனுதவி தொகைக்கான காசோலைகளை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் , நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா , கந்தர்வக் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை , மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, ஒன்றியக் குழுத் தலைவர் கார்த்திக், வேளாண் இணை இயக்குநர் ம.பெரியசாமி, வேளாண் செயற் பொறியாளர் செல்வம், ஊராட்சி மன்றத் தலைவர் எம்.பரமசிவம், த.சந்திரசேகரன், க.மதியழகன், மா. தமிழ் அய்யா, கே.எஸ்.ரவி, எம்.எம்.பாலு, மகேஸ்வரி சண்முகநாதன், வி.ஜி.ஆர். மணிவண்ணன், கே.சி. சிவக்குமார், ராஜா, கே.வி. சுப்பையா, எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ராஜா, நியூஸ் ராஜேந்திரன், திருப்பதி, முருகேசன், தவசு மணி, பாரதி அய்யாத்துரை, வைரக்கண்ணு, பரிமளம், ஜானகிராமன், கலையரசன், ராமசாமி, எம்.ஜி (எ) ராமச்சந்திரன், ஜினி இளங்கோ, ஆதித்யா துரை ராஜா, மழையூர் சத்யா ஆகியோர் கலந்துகொண்டனர்



நன்னிலம் சட்டமன்றத் தொகுதி நன்னிலம் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பூந்தோட்டம் ஊராட்சியில் நாம் தமிழர் கட்சியின் ஒன்றிய செயலாளர் மற்றும் அ.ம.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் தங்களை திருவாரூர் மாவட்டக் கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டிகே.கலைவாணன் முன்னிலையில் கழகத்தில் இணைத்துக்கொண்டனர். நன்னிலம் தெற்கு கழக ஒன்றிய செயலாளர் வெ.மனோகரன் , மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பணங்குடி ஏ.எஸ்.குமார், துணை அமைப்பாளர் சி.கே.எழிலரசன், கல்யாணசுந்தரம் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.